அரிசனங்களின் வீட்டு மனை (நெல்லை தாலுகா)

* 582 **கேள்வி—திரு. ஆர். எஸ். ஆறுமுகம்:** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) நெல்லை தாலுகா தச்சநல்லூர் பஞ்சாயத்தில் ஆனந்த புரம் (நன்னியாதிரியான்பச்சேரி) அரிசனங்களின் வீட்டு மனைகளின் தளத்தை உயர்த்தும் திட்டத்திற்கு உதவித் தொகையாக ரூ. 520 கட்டும்படி நெல்லை கலெக்டர் மேற்படி ஊர் அரிசனங்களிடம் கேட்டது உண்மையா?

(இ) அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

கனம் திரு. பூ. கக்கன்: (அ) ஆம். நில மட்டத்தை உயர்த்து வதற்கான செலவில் பாதித் தொகையை ஹரிஜனங்கள் கொடுக்க வேண்டும் என்று கேட்கப்பட்டது. முதலில் போட்ட செலவு மதிப்பீட்டின்படி இப்பாதித்தொகை ரூ. 2,150 ஆகும். ஆனால், ஹரிஜனங்கள் ரூ. 520 மட்டும் வசூல் செய்து, மேற்கொண்டும் நன்கொடை திரட்ட தங்களால் இயலாது என அறிவித்து விட்டனர்.

(இ) திருத்த மதிப்பீட்டின்படி நில மட்டத்தை உயர்த்து வதற்கான செலவு ரூ. 3,780 ஆகும். எனவே ஆர்ஜிதம் செய்யப் பட்ட நில மட்டத்தை உயர்த்துவதற்கான செலவில் எஞ்சிய தொகையாகிய ரூ. 3,260 அரசாங்கம் வழங்கியுள்ளது. இவ் வேலையை நிறைவேற்ற டெண்டர்கள் வரவழைக்கப்பட்டுள்ளன. காண்டிராக்டர் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் இவ்வேலை காண்டிராக் டருக்கு விடப்படும்.

Government offices in private buildings

* 583 *Q.*—SRI K. CHEEMAICHAMY, SRI C. M. AMBIKAPATHI: Will the Hon. the Minister for Works be pleased to state the total amount paid as rent for private buildings occupied by State Government offices during the year 1961–62, month-war?

THE HON. SRI V. RAMAIAH: The total amount for the year is Rs. 33,04,877·00. Month-wise details are not readily available.

திரு. கரு. சீமைச்சாமி: வாடகைக் கட்டடங்களில் அரசாங்க அலுவலகங்களை வைக்காமல், அரசாங்கத்திற்கே சொந்தமாகக் கட்டடம் கட்டத் திட்டம் ஏதாவது இருக்கிறதா?

கனம் திரு. வெ. ராமையா: அத்தகைய திட்டம் அரசாங் கத்தில் இருக்கிறது. ஆனால், கட்டடங்கள் கட்டவேண்டுமென்று நடவடிக்கை எடுக்கும்போது, தேசீய நெருக்கடி வந்துவிட்டது. அதன் காரணமாக, அந்த வேலையைச் சற்றுத் தளர்த்தியிருக் கிறோம். முக்கியமாக சேப்பாக்கத்தில் ரெவினியூ போர்டு கட்டத்திற்கு முன்னால் பார்த்தால் அஸ்திவாரம் போடப்பட்ட நிலையிலேயே கட்டடம் நிறுத்திவைக்கப்பட்டிருப்பது தெரியும். நெருக்கடியின் காரணமாக அது நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது.